செ.வெ.எண்: 09 நாள்: 04.04.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**வாக்குப்பதிவிற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெரம்பலூர் மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, 147.பெரம்பலூர்(தனி) சட்டமன்ற தொகுதிக்கு குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தினையும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தினையும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.04.2021) பார்வையிட்டு தெரிவிக்கையில்:

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்-2021ஐ முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டம், 147.பெரம்பலூர்(தனி) சட்டமன்ற தொகுதியில் 9 வேட்பாளர்களும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதியில் 22 வேட்பாளர்களும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் தேர்தல் நடத்தை விதிமுறைகளை முறையாக கடைபிடிக்கின்றார்களா என்பதனை கண்காணித்திட 147.பெரம்பலூர் சட்டமன்ற(தனி) தொகுதிக்கு பொதுப்பார்வையாளராக திருமதி மதுரிமா பருவா (சென்) இ.ஆ.ப., (Tmt.Madhurima Baruah (Sen) I.A.S.,) அவர்களும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு பொதுப்பார்வையாளராக திரு.எஸ்.தேஜஸ்வி நாயக் இ.ஆ.ப., (Thiru.S.Tejaswi Naik I.A.S ) அவர்களும், பெரம்பலூர் மற்றும் குன்னம் சடடமன்ற தொகுதிக்கு செலவின பார்வையாளராக திரு.அரவிந்த் ஜி.தேசாய் இ.வ.ப., (Thiru. Arvind G.Desai I.R.S) அவர்களும், காவல் பார்வையாளராக திரு.ராஜிவ் ஷ்வரூப் இ.கா.ப., (Thiru. Rajeev Swaroop I.P.S) அவர்களும் நியமிக்கப்பட்டு கண்காணித்து வருகின்றனர்.

147.பெரம்பலூர்(தனி) சட்டமன்ற தொகுதியில் 165 இடங்களில் 428 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு 1,47,434 ஆண் வாக்காளர்களும், 1,55,236 பெண் வாக்காளர்களும், 22 இதரர் என மொத்தம் 3,02,692 வாக்காளர்களும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதியில் 177 இடங்களில் 388 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு 1,35,097 ஆண் வாக்காளர்களும், 1,38,351 பெண் வாக்காளர்கள், 13 இதரர் என மொத்தம் 2,73,461 வாக்காளர்களும் வாக்களிக்க உள்ளனர். 147.பெரம்பலூர்(தனி) சட்டமன்ற தொகுதிக்கு குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் வாக்கு எண்ணும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

147.பெரம்பலூர்(தனி) சட்டமன்ற தொகுதியில் 39 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 79 வாக்குச்சாவடி மையங்களும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதியில் 38 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 96 வாக்குச்சாவடி மையங்களும் பதற்றமானதாக கண்டறியப்பட்டுள்ளது. பதற்றமான வாக்குச்சாவடி மையங்களுக்கு மத்திய அரசு பணியில் உள்ள 1 அலுவலர் நுண்பார்வையாளராக நியமிக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்பட உள்ளன. இப்பணியில் அஞ்சல் துறையை சேர்ந்த 5 அலுவலர்கள், கேந்திரியா வித்யா பள்ளியைச் சேர்ந்த 19 ஆசிரியர்கள், வங்கிப் பணியில் ஈடுபட்டுள்ள 67 அலுவலர்கள், இந்திய ஆயுள் காப்பீடு நிறுவனத்தைச் சேர்ந்த 12 அலுவலர்கள் என 103 அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கருதப்பட்ட 77 இடங்களில் பணியாற்ற உள்ளனர்.

தேர்தலில் சட்டத்திற்கு புறம்பாக நடைபெறும் விதிமீறல்களை கட்டுப்படுத்திட 147.பெரம்பலூர் மற்றும் 148.குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்கு தலா 9 பறக்கும் படை குழுவினர்களும், 9 நிலை கண்காணிப்பு குழுவினரும், மற்றும் 2 வீடியோ கண்காணிப்பு குழுவினர்களும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். **27.02.2021 முதல் 03.04.2021 வரை ஆவணங்களின்றி கொண்டு சென்ற 30 நபர்களிடமிருந்து ரூ.50,51,420 பறிமுதல் செய்யப்பட்டு உரிய ஆவணங்களின் அடிப்படையில் ரூ.38,86,330 விடுவிக்கப்பட்டுள்ளது.**

தேர்தல் கட்டுப்பாட்டு மையம் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசியின் மூலம் 1,574 புகார்கள் வரப்பெற்றுள்ளது. தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தில் உள்ள 18004256375 என்ற எண்ணின் மூலம் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் இதுவரை 55 புகார்கள் பெறப்பட்டுள்ளது. குன்னம் சட்டமன்ற தொகுதியில் இதுவரை 26 புகார்கள் பெறப்பட்டுள்ளது. இந்த அனைத்து புகார்களுக்கும் உரிய முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது.

147.பெரம்பலூர்(தனி) சட்டமன்ற தொகுதியில் 428 வாக்குச்சாவடி மையங்களுக்கு 20% இருப்புடன் 514 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 514 கட்டுப்பாட்டு கருவிகளும், 28% இருப்புடன் 548 வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதியில் 388 வாக்குச்சாவடி மையங்களுக்கு 20%

இருப்புடன் 930 (ஒரு வாக்குப்பதிவு மையத்திற்கு 2 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வீதம்) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், 465 கட்டுப்பாட்டு கருவிகளும், 28% இருப்புடன் 497 வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படவுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 816 வாக்குச்சாவடி மையங்களுக்கு 20 சதவீத இருப்புடன் 979 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 979 வாக்குப்பதிவு நிலை-1 அலுவலர்கள், 979 வாக்குப்பதிவு நிலை-2 அலுவலர்களும், 979 வாக்குப்பதிவு நிலை-3 அலுவலர்களும், என மொத்தம் 3,916 அலுவலர்கள் பணியாற்றவுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் எளிதில் வந்து வாக்களிக்க அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சாய்தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளை வாக்களிக்க வாக்குச்சாவடி மையங்களுக்கு அழைத்து வருவதற்கு 1 வாக்குச்சாவடி மையத்திற்கு 1 தன்னார்வலரும், 165 இடங்களில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு 177 சக்கர நாற்காலிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நாளன்று அனைவரும் வாக்களிக்க ஏதுவாக அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ஊடக சான்று மற்றும் கண்காணிப்புக்குழு மூலம் அமைக்கப்பட்டு, உள்ளூர் தொலைக்காட்சியில் அரசியல் கட்சியினரால் அனுமதியின்றி ஒளிபரப்பப்படும் விளம்பரங்களை கண்காணிப்பதற்கும், நாளிதழ்கள் மற்றும் வானொலியின் வாயிலாக ஒளிபரப்பப்படும் விளம்பரங்களை கண்காணிப்பதற்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையாக வாக்காளர்களின் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்திடவும், கைகளை சுத்தம் செய்திட கிருமி நாசினி வழங்குவதற்கும் அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் கூடுதலாக 2 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதனைப்போல தேர்தல் பணியில் ஈடுபடுவுள்ள அலுவலர்களுக்கு 857 தெர்மல் ஸ்கேனர் கருவியும், 6,90,900 பாலித்தின் கையுறைகளும், வாக்குச்சாவடிக்கு 25 வீதம் 20,400 முகக்கவசங்களும், 1 பணியாளருக்கு 100மி.லி வீதம் 3,920 கிருமிநாசினி பாட்டில்களும், 53,856 சர்ஜிக்கல் முகக்கவசம், அலுவலர்களுக்கு 26,928 ரப்பர் கையுறைகளும், 11,010 முழு உடல் கவசமும், வாக்குச்சாவடிக்கு 5 வீதம் 4,488 பாலித்தின் பைகள், 1,000 குப்பைத் தொட்டிகள், 850 அட்டைப் பெட்டிகளும் அலுவலர்களுக்கு வழங்கிட தயார் நிலையில் உள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை உறுதி செய்திடவும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்விளக்க விழிப்புணர்வு முகாம்கள், மகளிர் சுய உதவிக் குழு மூலம் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு வண்ணக் கோலங்கள் போடுதல், வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நடத்துதல், விழிப்புணர்வு பதாகைகள் ஆங்காங்கே ஏற்படுத்துதல், வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை வாகனங்கள் மற்றும் சுவர்களில் பொதுமக்கள் பார்க்கும் வகையில் ஒட்டுதல், சைக்கிள் பேரணி, மாணவ,மாணவிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு பேரணிகள், மினி மாரத்தான் ஓட்டம், கல்லூரிகளில் இளம் வாக்காளர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், வாக்காளர்கள் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், மாணவ, மாணவியர்களை கொண்டு பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி ஆகியவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேர்தல் அமைதியாக நடந்திடவும், மக்கள் பாதுகாப்பாகவும், தைரியமாகவும் வாக்களித்திட ஏதுவாகவும் உள்ளூர் காவலர்கள் (Local Police) 369 நபர்களும், ஆயுதப்படை காவலர்கள் (AR) 252 நபர்களும், முன்னாள் ராணுவத்தினர் (ExServiceman) 40 நபர்களும், முன்னாள் வன காவலர் (Ex Forest) 1 நபரும், ஓய்வுபெற்ற தீயணைப்புத்துறையைச் (Ex Fire Service) சார்ந்த 1 நபரும், ஓய்வுபெற்ற சிறைத்துறை காவலர்கள் (Ex Sub jail) 5 நபர்களும், ஓய்வுபெற்ற காவலர்கள் (Retired Police) 10 நபர்களும், வனத்துறையினர்கள் (Forest on duty) 11 நபர்களும், தீயணைப்புத்துறையினர்கள் (Fire Service on duty)1 நபர்களும், ஊர்க்காவல் படை வீரர்கள் (Perambalur and Karnataka Home Guard) 279 நபர்களும், தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர்கள் (TSP Vth BN) 92 நபர்களும், **சிறப்பு பிரிவு படையினர்கள் (Special Unit) 26 நபர்களும், மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் (CISF)92 நபர்களும், தேசிய மாணவர் படையினர் (NSS) 250 நபர்களும் என மொத்தம் 1434 பணியாற்றவுள்ளனர் (இதில் 1 மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளரும் (DSP), 22 ஆய்வாளர்களும் (Inspector), 65 துணை ஆய்வாளர்களும் (SI), 41 சிறப்பு துணை ஆய்வாளர்களும் (SSI), 1305 காவலர்கள் (ORS))** என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கடபிரியா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆய்வின்போது, பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஜெ.இ.பத்மஜா இ.ஆ.ப., குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.எஸ்.சங்கர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.பாரதிதாசன், வட்டாட்சியர்கள் திரு.சின்னதுரை, கிருஷ்ண குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**